Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 14-6-1985 வெள்ளிக்கிழமை (வைகாசி 32 தமிழாண்டு 24) முழக்கம் 129

## பிக்கு உடையில் கைதானவர் பொலிஸ் சுட்டதால் மரணம்!

அனுராதபுரம் ரயில் நிலையத்தில் பிக்கு உடையில் நின்றபோது கைதானவர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டினால் மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வாய்மூடி மௌனியாக எவையும் பேச மறுத்த இவர், தமிழ் தீவிரவாதியாக இருக்கலாமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இவர் ரயில் நிலைய பாதுகாப்புச் சேவையினரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார். பொலிஸ் பாதுகாப்பிலிருந்து தப்பி ஓட இவர் முயற்சித்தபோது சுடப்பட்டதால் மரணமானதாக இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

★ இரு பகுதி ஆயுத பாவனையையும் நிறுத்தல் ★ சகல ரோந்துகளையும் தடுத்தல் ★ பத்திரிகைத் தணிக்கையை நீக்குதல் அமுலுக்கு வந்ததும்

# வட பகுதி பாதுகாப்பு முகாம்கள் பலாலியில் ஒன்றிணைக்கப்படும்

## நல்லசூழ்நிலையை ஏற்படுத்த இத்திட்டங்கள் உதவலாமென அரச உயர்மட்டம் யோசனை

புதுடில்லியில் நடைபெற்ற இரு நாட்டுத் தலைவர்களினதும் பேச்சுவார்த்தையின் அடிப்படையில், தற்போது ஏற்பட்டு வரும் புதிய மாறுதல் நிரந்தரமானதாகி 'போர் நிறுத்தத்தை' இரு பகுதியினரும் அமுல்படுத்தும் பட்சத்தில், வடக்கிலுள்ள 'பாதுகாப்புப்படை முகாம்களை' ஒருங்கிணைத்து, பலாலியில் மட்டும் இதனை இயங்கச் செய்வது பற்றி அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து வருவதாக நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.

சீருடையினரின் அவசியமற்ற ரோந்துகள், சுற்றி வளைத்தல்,

### போர் நிறுத்தம்

அடுத்த சில தினங்களில் தமிழ்த் தீவிரவாதிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்

—4 ஆம் பக்கம் பார்க்க

கடுமையான சோதனைகள் போன்ற நடவடிக்கைகளை இதன் மூலம் கட்டுப்படுத்தி, அவர்களது சேவையை மட்டுப்படுத்தவும் உயர் மட்டத்தில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

அதேவேளையில், தற்போது அமுலிலிருக்கும் பத்திரிகைத் தணிக்கையையும் நீக்குவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது.

தமிழ்த் தீவிரவாதிகள் கடந்த சில வாரங்களாக வடக்கில் தமது நடவடிக்கைகளைக்

—4 ஆம் பக்கம் பார்க்க

ஜனாதிபதியின் பணிப்பில்

## 6 சட்ட அறிஞர் குழு இன்று டில்லி பயணம்

ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கும பாரதப் பிரதமர் ராஜீவ் காந்திக்குமிடையே இணக்கம் காணப்பட்ட உச்சிமகாநாட்டு முடிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குகளிலுள்ள சட்ட நுணுக்கங்களை ஆராய ஆறு சட்ட அறிஞர்களின் குழு இன்று புதுடில்லி பயணமாகின்றது.

ஜனாதிபதியின் பணிப்பில் செல்லும் இக்குழுவுக்கு ஜனாதிபதியின் இளைய சகோதரரும், பிரபல சட்டத்தரணியுமான எச். டபிள்யூ. ஜெயவர்த்தன கியூ. ஸி. தலைமை தாங்குகின்றார்.

சர்வகட்சி மாநாட்டுச் செயலக செயலாளர் திரு. பீலிக்ஸ் டயஸ் அபேசிங்கா, உதவிச் செயலாளர் விஜேசிங்கா, சட்டவரைஞர் நளின் அபேசேகரா, ஜனாதிபதி கவுன்ஸில் சட்டத்தரணிகளான எச். எல். டி. சில்வா, எல். சி. செனி

—4 ஆம் பக்கம் பார்க்க

இராணுவத் தளபதியுடன்

## அமைச்சர் லலித் யாழ், திருமலை திடீர் விஜயம்!

தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்வையிடுவதற்காக நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார். அமைச்சருடன் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் நளின் செனவிரட்ணவும் வந்திருந்தார்.

அமைச்சரின் இவ் விஜயத்தினால் நாட்டின் தற்போதைய நிலைமை பற்றி பாதுகாப்புப் படையினர் அறிந்துகொள்ளக் கூடியதாக இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ் அரசாங்க அதிபரையும் அமைச்சர் சந்தித்துப் பேசினார்.

இதன் பின்னர் அமைச்சர் லலித் அத்துலத்முதலி மூதூர், சேருவில, திருமலை ஆகிய இடங்களுக்கும் சென்று பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்வையிட்டார். இப்பகுதிகளில் எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய பந்தோபஸ்து நடவடிக்கைகள் பற்றியும் அமைச்சர் கலந்துரையாடியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் இடம்பெற்ற வன்செயல்களையடுத்து வெளியேறியவர்களை மீண்டும் அந்தந்த இடங்களில் குடியேற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

## நாளைமுதல் புதன்வரை கோட்டையில் வழங்கல்

யாழ். கச்சேரியில் பென்ஷன் பெற்றுவந்தவர்களுக்கான ஒய்வூதியக் கொடுப்பனவுகள் நாளை முதல் யாழ். பொலிஸ் நிலைய வளவிலுள்ள இலங்கை வங்கிக்கிளையில் பணமாக வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை குடிசார் ஒய்வூதியம் 135ஆம் பக்கம்வரை உள்ளவர்களுக்

—4-ஆம் பக்கம் பார்க்க

## யாழ்தேவி இன்று முதல் யாழ். வரை!

### டிக்கற் பணம் ஸ்ரேடியத்தில் கட்ட வேண்டும்

இன்று முதல் யாழ்தேவி ரயில் சேவை யாழ்ப்பாணம் வரை நடைபெறுமென புகையிரதப் பகுதி அறிவித்துள்ளது.

காலை கொழும்புக் கோட்டையிலிருந்து புறப்பட்டு பகல் ஒன்று இருபத்தெட்டுக்கு யாழ்ப்பாணம் வந்து சேரும் யாழ்தேவி மறுபடியும் இரண்டு பத்துக்கு இங்கிருந்து கொழும்பிற்குப் புறப்படும்.

யாழ்தேவியில் பயணம் செய்பவர்கள் தமக்குரிய டிக்கற்றைப் பெறுவதற்கு அதன் பெறுமதித் தொகையை துரையப்பா விளையாட்டரங்கில் உள்ள தற்காலிக புகையிரதப் பகுதி அலுவலக அறையில் செலுத்தி பற்றுச் சீட்டுப் பெறவேண்டும். பின்னர் இந்தப் பற்றுச் சீட்டை யாழ்.

—4 ஆம் பக்கம் பார்க்க

## எஸ்மன்ட் தமிழகம் சென்று எம். ஜி. ஆர்., கூட்டணித் தலைவர்களைச் சந்திக்க ஏற்பாடு!

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் வெளிவிவகார ஆலோசகரான திரு. எஸ்மன்ட் விக்கிரமசிங்கா எந்த வேளையிலும் தமிழகத்துக்குப் பயணத்தை மேற்கொள்ளலாமெனத் தெரிய வந்துள்ளது.

இம்மாத முற்பகுதியில் ஜனாதிபதியுடன் புதுடில்லி சென்ற இவர், கடந்த திங்கட்கிழமை உச்சிமகாநாடு சம்பந்தமான முக்கிய ஆவணங்களுடன் நாடு திரும்பினார்.

தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் உட்பட, சென்னையில் தங்கியிருக்கும் கூட்டணித் தலைவர்களைச் சந்தித்து இனப் பிரச்சினை பற்றியும், தற்போது மாற்றமடைந்து வரும் சூழ்நிலை பற்றியும் பேச்சுவார்த்தை நடத்துவது இவரது முக்கிய வேலையாக இருக்குமென கொழும்பு வட்

—4 ஆம் பக்கம் பார்க்க

## பாவற்குளத்தில் பதற்றம்!

(வவுனியா)

பாவற்குளம் பகுதியில் நேற்று நடைபெற்ற சில சம்பவங்களால் அப்பகுதியில் நேற்று பதற்றம் நிலவியது.

சில வீடுகளும், கடை ஒன்றும் இதனால் தீக்கிரையானதாகவும், பொது மக்களில் சிலர் காயத்திற்குள்ளானதாகவும் தெரியவந்துள்ளது.

இதனால் கொழும்பு-யாழ்ப்

—4-ஆம் பக்கம் பார்க்க

## இரு இளைஞர்கள் பிடிபட்டனர்

நேற்று மாலை யாழ். நகரில் ரோந்து சென்றவர்களால் மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இரண்டு இளைஞர்கள் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளார்கள். ஆஸ்பத்திரி வீதி - வைரேசன் சந்தியில் இவர்கள் கைதாகினர்.

## நீண்ட இடைவெளிக்குப்பின் சீருடையினரின் நடை பவனி

(இருபாலை)

நீண்ட நாள் இடைவெளிக்குப் பின் கல்வியங்காடு இராசபாதையூடாக நடைபவனியாகவும், வாகனங்களிலும் வந்த சீருடையினர் வீதிகளிலும் வீடுகளிலும் சோதனைகள் மேற்கொண்டனர்.

பழஞ்சந்தியில் நின்ற சீருடையினர் அவ்வழியால் வந்த சிலர்மூலம் சுவரொட்டிகளை அகற்றுவித்ததாகவும் தெரிய வருகிறது.

சந்தியில் உள்ள அரசமரத்திலும் கடைகளுக்குள்ளும் மறைந்து நின்று தமது

- 4 ஆம் பக்கம் பார்க்க

## ஆசிரியைக்கு மரணதண்டனை

மட்டக்களப்புப் பகுதியில் 48 வயதுடைய ஆசிரியை ஒருவருக்கு நேற்று மரணதண்டனை வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவரது சடலம் மின் கம்பமொன்றில் கட்டப்பட்டிருந்தது.

# வடபகுதி அகதிகள் பிரச்சினைக்கு கிறிஸ்தவ ஐக்கிய சங்கமும் உதவி வழங்கத் தீர்மானம்

(நல்லூர்)

"இராணுவத்தினர் மேற்கொள்ளும் திடீர் நடவடிக்கைகளினால் வடபகுதியில்நாளுக்கு நாள் அகதிகள் பிரச்சினை அதிகரித்து வருகிறது: இவ்வகையாகப் பாதிக்கப்படும் மக்களுக்கு எமது சங்கமும் நிவாரண உதவிகளை மேற்கொள்ள வேண்டும்: இதற்கு வேண்டிய நிதியை தேசிய கிறிஸ்தவ சங்கத்திடமிருந்து பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்."

என்று கோரும் தீர்மானம் யாழ்ப்பாண கிறீஸ்தவ ஐக்கிய சங்கத்தின் பொது நிர்வாக சபையில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

யாழ். றிம்மர் மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. யே. ஜி. அரசரத்தினம் தலைமையில் நடைபெற்ற பொது நிர்வாக சபைக் கூட்டத்தில் ஆவணி மாதம் 9ம் 10ந் திகதிகளில் சங்கத்தின் சார்பில் எழுப்புதற் கூட்டங்களை நடாத்துவதென்று தீர்மானித்துள்ளது.

யாழ் மாநகராட்சி மன்றத்தினால் புதிதாக நிறுவப்பட்டிருக்கும் மூன்று கிளை நூல் நிலையங்களுக்கும் வேண்டிய நூல்களை வழங்க நடவடிக்கை எடுப்பதென்றும், யாழ் பொதுசன நூல் நிலையத்திற்கு கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கான பாட நூல்களைப் பெருமளவில் வழங்க நடவடிக்கை எடுப்பதென்றும், தீர்மானங்கள் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சங்கத்தின் பொதுச் செயலாளராகப் பணியாற்றிய அருட்திரு; எஸ். சுகுணநந்தன் அடிகளார் வெளிநாடு சென்றிருப்பதால், சங்கத்தின் உப செயலாளராகப்பணியாற்றிய அருட் திரு; யே. சர்வானந்தன் அடிகளாரைப் பொதுச் செயலாளராகவும், திரு. பீ ஈ. தனராஜசிங்கத்தை உப செயலாளராகவும் சபை ஏற்றுக்கொண்டது.


## 31ம் நாள் நினைவு அஞ்சலி

### க. கார்த்திகேசு

(நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்)

ஆண்டவன் படைப்பு

27.02.1938

✻

ஆழியில் ஆள்பவன் அழிப்பு

15.05.1985



அன்புத் தெய்வமே!

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் மூழ்கடித்து மீளாத் துயில் கொண்டு இறையடி சேர்ந்த தங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்,

"லிங்கபதி"
மாவிலித்துறை,
நெடுந்தீவு.

அன்பு மனைவி, தந்தை, தாய்
புத்திரர், உற்றார் உறவினர்



## இறை இணைவின் 31-ம் நாள்

ஆண்டவன் படைப்பு:

25-12-1929

அரக்கர் அழிப்பு:

15-5-1985



### திருமதி. கிறிஸ்ரின் செபமாலை

(ஆசிரியை)

அன்னையாய், ஆசானாய், அருட்சுடராய்,
அன்பைச் சொரிந்து அறிவை அளித்து
ஆண்டவனை நினைந்து
ஆற்றினாய் அளப்பரிய சேவை—அம்மா
ஆழ்கடல் நடுவில் திசைமறந்து யாமிருக்க
எங்கு சென்றாய்
அந்நியர் வரள்களில் வேதசாட்சியானாய்.

நெடுந்தீவு,
பிள்ளைகள், மருமக்கள், உறவினர்கள்



## 31-ம் நாளில்......



திருமதி
வேலுப்பிள்ளை
புஸ்பராணி
(இளைப்பாறிய ஆசிரியை)

ஆண்டவன் படைப்பு:
31-8-1924

அரக்கன் அழிப்பு:
15-5-1985

ஆண்டவனே! ஆள்பவனே! அரக்கனே!

வைகாசி மாதமதில்; வளர்கின்ற பிறைதனிலே;
பொங்கும் சமுத்திரத்தில், பொங்காத வேளையிலே;
அழித்தாயே என் குலவிளக்கை அணையவில்லை
எம் அகத்தே.

அம்மா! உன் பிரிவுக்காக ஏங்கித் தவிக்கும்

நெடுந்தீவு மேற்கு;
நெடுந்தீவு

கணவன், மக்கள், மருமக்கள்
சகோதர, சகோதரிகள்





✻ பூநகரி பல்லவராயன்கட்டு, மரியராசா அருமைநாயகி தம்பதிகளின் மகள் ஒமெக்சியா லிலியா இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ அளவெட்டி, தங்கராசா கமலாதேவி தம்பதிகளின் மகன் கோகுலன் இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ முல்லைத்தீவு, சண்முகலிங்கம் ரஜனி தம்பதிகளின் மகள் ஷைலினி இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ கிளிநொச்சி, நாகேந்திரம் ஜெபமலர் தம்பதிகளின் மகன் ஜெயதீபன் இன்று தனது நாலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ சித்தன்கேணி, இராசரட்ணம் மனோகரி தம்பதிகளின் மகன் உதயகரன் இன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ மட்டுவில் வடக்கு, சோமசுந்தரக் குருக்கள் நீலா தம்பதிகளின் மகன் கோபாலகுமார் இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ வளன்புரம், கொழும்புத்துறையைச் சேர்ந்த பேக்மன் பாலாம்பிகை தம்பதிகளின் செல்வப் புதல்வி பிரதீபா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று கொண்டாடுகிறார்.

## பாடசாலைகளில் பிஸ்கட் களவு

(சங்கானை)

வட்டுக்கோட்டை பகுதியில் பல பாடசாலைகளில் ஓடுகள் பிரித்து மாணவர்களின் பிஸ்கட்டுகளை திருடர்கள் சூறையாடியுள்ளனர்.

தினமும் பல பாடசாலைகளில் குழந்தைகளின் பிஸ்கட்டுகளை திருடி வருவதனால் அயல் வீடுகளில் அதிபர்கள் பிஸ்கட்டுகளை பாதுகாத்துவர வேண்டிய துர்ப்பாக்கிய நிலையை அடைந்துள்ளனர்.

## பாதிப்புற்ற ஊழியர் விபரம் அமைச்சு கோரியுள்ளது

அனுராதபுரச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டுத் தமிழ்ப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்த அரச கூட்டுத்தாபன ஊழியர்களின் விவரங்களை பொது நிர்வாக அமைச்சு கோரியுள்ளது.

பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக் குழு யாழ். அரசாங்க அதிபர் திரு. வி எம். பஞ்சலிங்கத்துடன் இரண்டாவது தடவையாக நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து அவர் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் பயனாக அமைச்சின் செயலாளர் திரு. சிறிவர்த்தன இவ்விவரங்களைக் கோரியுள்ளார்.

குறிப்பிட்ட விவரங்களை வெள்ளிக்கிழமைக்கு முன்னதாகத் தமக்குத் தயாரித்து அளிக்குமாறு அரசாங்க அதிபர் பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக் குழுவிடம் கேட்டுக் கொண்டுள்ளார். எனவே மேற்படி விவரங்களை 95/1 பிரான்சிஸ் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக் குழுவிடம் உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு குழுவின் செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன் பாதிக்கப்பட்ட பிரஸ்தாப ஊழியர்கள் யாவரையும் கோரியுள்ளார்.

## டாக்டருக்கு பிரியாவிடை

(இருபாலை)

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் ஒரு வருடமாக வைத்திய பொறுப்பதிகாரியாகக்கடமைபுரிந்து யாழ் வைத்தியசாலைக்கு இடமாற்றலாகிச் செல்லும் செல்வி. நிர்மலா பரமநாதன் சேவையைப் பாராட்டி அண்மையில் வைத்தியசாலை உத்தியோகத்தர்களாலும், ஊழியர்களாலும், தேனீர் விருந்துபசாரம் அளிக்கப்பட்டது.

இவரின் இடத்திற்கு வைத்திய பொறுப்பதிகாரி திரு. ம. அன்பழகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

உதவி வைத்தியர் திருமதி. து. கோபாலரட்ணம் தலைமையுரையாற்றுகையில், செல்வி. நிர்மலா பரமநாதன் ஒரு அன்பான ஆதரவான பொறுப்பதிகாரி, அவர் மேலும் சேவை புரிந்து ஒரு வைத்திய நிபுணராக வரவேண்டும் என்று கூறிய அவர், நிர்மலா என்ற பெயருடையவர்கள் சாதனைகளை நிலைநாட்டக் கூடியவர்கள். முன்னர் ஒரு நிர்மலா சாதனை நிலைநாட்டி விட்டார் என்றும் கூறினார்.

செல்வி. நிர்மலா பரமநாதன் பதிலுரை நிகழ்த்தினார்.

இன்று!

## கந்த முருகேசனார் நினைவு தினம்

இன்று வெள்ளிக்கிழமை தமிழறிஞர் தென்புலோலியூர் கந்த முருகேசனாரின் நினைவு தினமாகும். இதனையொட்டி மந்திகைச்சந்தி நாவலர் புத்தகசாலைக்கு முன்பாகவுள்ள அவரது சிலைக்கு அன்றைய தினம் மலர்மாலை சூட்டி தினத்தைக் கொண்டாட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


SCIENCE ACADEMY
310, Clock Tower Road,
JAFFNA

A/L 87 புதிய பிரிவு
ஆரம்பம்: 15-6-85


## வரி விளம்பரம்


### யாருடையது ?

10-6-85 திங்கட்கிழமை கிளிநொச்சி - யாழ்ப்பாணம் பஸ்ஸில் தேங்காய் 'ரூ ன், வலையும் இருந்த ஒரு சாக்கினை கண்டெடுத்துள்ளேன். உரியவர் தொடர்பு கொள்க:- V சின்னத்தம்பி, 41, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம்.

### தவறிவிட்டது

523222937 X இலக்க தேசிய அடையாள அட்டையும் அலுவலக அடையாள அட்டையும் யாழ்நகரில்தவறிவிட்டது, கண்டெடுத்தவர் ஈழமுரசு அலுவலகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

சிதம்பரப்பிள்ளை ஸ்ரீரங்கராஜா ஆகிய எனது அடையாள அட்டை குருநகர் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுப்போர் தயவுசெய்து V. மரியதாஸ், 344/6 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திலோ ஈழமுரசு காரியாலயத்திலோ ஒப்படைக்கவும்.

ப. கிருபாகரன், 27/1, கலைமகள் வீதி, அரியாலை என்ற விலாசமிடப்பட்ட யாழ். பல்கலைக்கழக அடையாள அட்டை ஒன்றும், மக்கள் வங்கி கணக்குப் புத்தகம் ஒன்றும் கச்சேரி நல்லூர் றோட்டுக்கும், முத்திரைச்சந்தைக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டு எடுப்பவர்கள் ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

### ஏலவிற்பனை

இம்மாதம் 15ம் திகதி சனிக்கிழமையும், 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலையிலிருந்து பலவித பொருட்கள் யாழ்ப்பாணம் கஸ்தூரியார்காட்டுச் சந்தையில் விற்பனையாகும். உங்களிடம் விற்பனைக்கிருக்கும் பொருட்களையும் அனுப்பி வைக்கலாம். ஏல விற்பனை நிலையம், கோப்பாய்.

176/1, பிரதான வீதி. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்டிடத்தில் வீட்டுத் தளபாடங்கள், மற்றும் பாவனைப் பொருட்கள் அனைத்தும் 15-6-85 — 16-6-85 சனி, ஞாயிறு ஆகிய தினங்களின் காலை 10 மணிக்கு ஏலவிற்பனை நடைபெறும். மேலும் விபரங்களுக்கு: S. ஜெயராஜா 117, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

சாவகச்சேரி தனங்கிளப்பில் கேரதீவு றோட்டை முகப்பாகக் கொண்ட 30 பரப்பு காணியும், சாவகச்சேரி கச்சாய் றோட்டில் முதலாம் கட்டையடியில் வீடு கட்டுவதற்குகந்த காணித் துண்டுகளும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு. சி. பொ. மயில்வாகனன் சட்டத்தரணி, சாவகச்சேரி.

உதய சிந்தனை

பிறருக்குத் தளையறுப்பதற்காக வீர வம்சம் மீண்டும் மீண்டும் தியாகத் தோப்பில் விளைந்து கொண்டேதான் இருக்கும்.
-- விவேகானந்தர்

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

14-6-1985 வெள்ளிக்கிழமை (குரோதன வைகாசி 32)

# நன்மை விரும்பிகளை நம்பிச் செயற்படுங்கள்

குருநகர் உணவுக் களஞ்சியத்தில் இடம்பெற்ற கொள்ளையைக் கண்டித்து அடுத்தடுத்து வெளியான அறிக்கைகளும் விடுக்கப்பட்ட வேண்டுகோள்களும் ஓரளவுக்குப் பயனளித்துள்ளது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருவதாகும்.

கொள்ளையடிக்கப்பட்ட உணவுப் பொருள்கள் ஏழை, எளிய மக்களின் ஒருவேளை உணவுக்காகக் கொண்டுவரப்பட்டவை என்பதையும் உணராத ஒருசில தீயசக்திகள் நடந்துகொண்டமுறை, இப்போது அவைகளைத் திருப்பி ஒப்படைக்க எடுக்கப்பட்ட முயற்சியின் மூலம் திருத்தப்பட்டுள்ளது.

''உரிமைக்காகப் போராடுபவர்கள் அரிசிக் கொள்ளையர்கள்'' என்ற அவப்பெயர் ஏற்படாது, துரிதகதியில் உரிய நடவடிக்கை எடுத்தவர்கள் அனைவரும் போற்றப்பட வேண்டியவர்கள்.

''அறுசுவை உண்டி வேண்டாம் ஒரு நேரக் கஞ்சியாவது போதும்'' என்ற நிலையில் வாழும் தமிழ் மக்களுக்கு உணவு முத்திரையாகவும், குறைந்த விலை உணவுப் பொருளாகவும் வழங்கப்படவென வந்த அரிசியை கொள்ளையடித்தவர்களும், அதனை வெளிச் சந்தையில் கண்டவிலைக்கும் விற்றவர்களும், தமிழ் மக்களுக்கு நன்மை செய்தவர்களாகத் தம்மைக் கருத முடியாது.

யாழ். தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. சிவமகாராசா தமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்ததுபோல ''அரிசிக் கொள்ளை எமக்கு அழிவையே தேடித்தரும்'' என்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.

முதல்நாள் கொள்ளையைக் கண்டித்து அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்த பின்னரும், அடுத்த நாள் இரவும் பகலும் களஞ்சியத்தில் கொள்ளை நடைபெற்றமை அனைவருக்கும் கவலையைத் தருவதாகும்.

பொதுமக்கள் 'நன்மை விரும்பிகள்' சிலர் அதனைத் தடுப்பதற்கு நேரடியாக முயற்சிகள் எடுத்தபோதிலும், இதனால் ஏற்படப்போகும் தாக்கத்தை உணராத பொதுமக்களில் சிலரும் பகிரங்கமாகவே கொள்ளையில் ஈடுபட்டமை இன்றைய நிலையில் வேதனையைத் தரும் ஒரு செயலாகும்.

அரசாங்க அதிபர் நிலைமையை உணர்த்தி விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து 'நன்மை விரும்பிகளின்' தீவிர முயற்சியினால் பல மூடை அரிசிகள் மீளப் பெறப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

எனினும், இக் கொள்ளையின் தாக்கத்தினால் குருநகர் உணவுக் களஞ்சியத்தை மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்பற்ற நிலை காரணத்தால் பல வருடங்களாக யாழ்ப்பாணத்து மக்களின் உணவுக் களஞ்சியமாக விளங்கிவந்த குருநகர் மூடப்பட்டு, இங்கிருந்த சகல பொருள்களும் நாவற்குழிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

எந்த நெருக்கடியான நேரத்திலும், நகரின் போக்குவரத்து வசதிகள் கூடிய ஸ்தானமாக இருந்துவந்த குருநகர் உணவுக் களஞ்சியம் மூடப்பட்டதால் பாதிக்கப்படப் போகின்றவர்கள் பொதுமக்கள் தான் என்பதை எவரும் மறுக்க முடியாது.

பலநோக்கக் கூட்டுறவுச் சங்க லொறிகள் நாவற்குழியின் பல தடைகளையும், சோதனைகளையும் தாண்டி அங்குள்ள உணவுக் களஞ்சியத்துக்குச் சென்று உணவுப் பொருள்களைப் பெற்று வருவது பல சிரமங்களை ஏற்படுத்தும் என்பதை அனுபவத்தால் அறிய முடியும்.

தடை நிலையங்களில் பஸ்களை நிறுத்தி, பிரயாணிகளை ஏற்றி இறக்குவதுபோல, கூட்டுறவுச் சங்கங்களின் லொறிகளையும் நிறுத்தி, மூடைகளையும் ஏற்றி இறக்க நேர்ந்தால், பொதுமக்கள் வயிறு காய நேரிடும்.

உணவுப் பஞ்சமும், மனித பட்டினியும் ஒன்றுடனொன்று போராட்டம் நடத்தும் பயங்கரமான நிலை இங்கு ஏற்படும்.

'நன்மை விரும்பிகள்' உணவுப் பொருட்களுக்கு பாதுகாப்பளிக்க இப்போது முன்வந்துள்ளதால், குருநகர் களஞ்சியத்தை மூடும் முடிவை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீளாய்வு செய்வது நல்லதென நினைக்கின்றோம்.

ஆயிரத்தில் ஒருவர் செய்த தவறுக்காக, ஆயிரம் பேரும் பாதிப்படக் கூடாது என்பதே நாம் சுட்டிக்காட்ட விரும்புவதாகும்.

★ றீகனிடம் ராஜீவ் நேரில் வற்புறுத்து: பாகிஸ்தான்

# அணு ஆயுதத் திட்டத்தை கைவிட நிர்ப்பந்தியுங்கள்

(வாஷிங்டன்)

பாரதப் பிரதம மந்திரி திரு ராஜீவ் காந்திக்கும், அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனால்ட் றீகனுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ பேச்சு வார்த்தைகளின் போது இருதரப்பு உறவுகள், கருத்து வேறுபாடுகளைக் களைதல் மற்றும் மேற்காசிய நிலைமை, படைக்குறைப்பு சர்வதேச விவகாரங்களும் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. பாகிஸ்தானின் ஆயுதத் திட்டத்தைத் தொடர்ந்து செயற்படுத்தவேண்டாம் என்று நிர்ப்பந்திக்குமாறு திரு காந்தி திரு. றீகனிடம் கேட்டுக்கொண்டார், இது உங்களால் செய்யக்கூடியதே என்றும் திரு காந்தி திரு. றீகனிடம் கூறினார். பாகிஸ்தானின் அணு ஆயுதத் திட்டம் தமக்கும் கவலை அளிப்பதாகத் திரு. றீகன் கூறியதாகவும் வாஷிங்டன் அறிக்கைகள் நேற்றுத் தகவல் தந்தன.

இரு தலைவர்களினதும் சந்திப்பின்போது பாகிஸ்தான் தேவைக்கதிகமாக ஆயுதங்களைப் பெற்றுக் குவிக்கும் விடயமே பிரதான இடம் வகித்ததாகக் கூறப்பட்டது.



இரு தலைவர்களும் முப்பது நிமிடங்கள் எவரது உதவியுமின்றி உரையாடினர். பின்னர் இருதரப்பு அதிகாரிகளும் அவர்களுடன் கலந்து கொண்டனர்.

'பாரதத்துடனான உறவை அமெரிக்கா பெரிதும் மதிக்கிறது. புதிய துறைகளிலும் பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்ளவே அமெரிக்கா விரும்புகிறது' என்று திரு. றீகன், திரு. காந்தியிடம் தெரிவித்தார். அணு ஆயுதப் பெருக்கம், இந்துமாகடல் நிலை என்பன குறித்து திரு. காந்தி தன் கவலையை வெளியிட்டார்.

பாகிஸ்தான் பெருமளவில் ஆயுதங்களைக் குவித்து வருவதால் பாரதமும் ஆயுத விடயத்திற்குப் பெரும் பணத்தைச் செலவிட வேண்டியுள்ளது. இதனால் பொருளாதாரத்துறையும் பெரிதும் பாதிக்கப்படுகிறது என்று திரு. காந்தி வேதனை வெளியிட்டார்.

திரு. காந்தி அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு. ஜோர்ஜ் சூல்ட்ஸுடனும் பேச்சுவார்த்தை நடத்தினார். அணு ஆயுதப் பரவலைத் தடுக்கவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது.

இது தொடர்பான உடன்படிக்கையில் பாரதமும் கைச்சாத்திடலாம் ஆனால் இந்த உடன்படிக்கையில் நிலவும் பாரபட்சம் நீங்கினால்தான் இதுபற்றி ஆலோசிக்க முடியும் என்று திரு காந்தி கூறினார். அணு ஆயுதத் தயாரிப்பில் பாரதத்துக்குநாட்டமில்லைஎன்றார் அவர்.

திரு. றீகனுடனான சந்திப்பில் அவருக்கு உதவியாகத் துணை ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ், பாதுகாப்பு மந்திரி திரு. பேகர் முதலானோரும் திரு. காந்திக்கு உதவியாக பாதுகாப்பு மந்திரி திரு. பி. வி. நரசிம்மராவ், விவசாய மந்திரி திரு. பூட்டாசிங், வெளிவிவகாரக் கொள்கை வகுக்கும் கமிட்டித் தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதி முதலானோரும் கலந்து கொண்டனர்.

திரு. காந்திக்கு முப்படை அணிவகுப்பு மரியாதையளிக்கப்பட்டதுடன் பத்தொன்பது



பீரங்கிக் குண்டுகளும் மரியாதையின் நிமித்தம் தீர்க்கப் பட்டன.

திரு. றீகனுடனான சந்திப்பு பயனுள்ளதாக இருந்தது என்று திரு. காந்தி பின்னர் தெரிவித்தார்.

## யுத்தம் நீடிப்பு

(லண்டன்)

ஈராக் ஈரானியத் தலைநகர் தெஹ்ரான் மீது நாள்பூராவும் விடாது கடும் தாக்குதல் நடத்தியதாக பாக்தாத் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஆயினும் ஈரானும் ஈராக்குக்குத்தான் தாக்குதலில் சிறிதும் விட்டுக் கொடுக்கவில்லை என்று தெரிவிக்கிறது. பீரங்கித்தாக்குதல்களால் பல நகரங்கள் தரை மட்டமானதாகப் போர் முனைத் தகவல்கள் தகவல் தெரிவித்தன.

## ஆண்மை நீக்கச் சட்டம் அமுலாகும் முன்பே...

(போட்மொறஸ்பி)

அவுஸ்திரேலியாவுக்கு வடக்கே உள்ள பப்புவாநியுகினித் தீவின் அரசாங்கம் கற்பழிப்புக் குற்றம் புரிவோருக்கு ஆண்மை நீக்கம், பொதுஇடத்தில் வைத்துத் தூக்கிலிடுதல் ஆகியவற்றைத் தண்டனையாகக் கொண்டுவர ஆலோசித்து வருகையில் மிகக் கொடூரச் சம்பவம் பற்றிய தகவல் ஒன்றும் வெளியாகியுள்ளது. ஏழு இளைஞர் கொண்ட கோஷ்டி ஒன்று ஓர் இல்லத்தின் பாதுகாப்பு வேலியையும் உட்தாண்டிச் சென்று அங்கிருந்த ஓர் தாயையும் மகளையும் பலவந்தமாக மிகக் கொடூரமான முறையில் கற்பழித்துள்ளது. கடந்த வருடம் பப்புவாநியுகினியில் பெண் ஒருவரும் அவரது எட்டு வயது மகளும், அவுஸ்திரேலிய விரிவுரையாளர் ஒருவரின் பதினேழு வயது மகளும் கற்பழிக்கப்பட்டிருந்தனர், இக் கொடுமைகளுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து ஆர்ப்பாட்டம் புரிந்ததையடுத்தே அரசாங்கம் ஆகிகடும் சட்ட அமுலுக்கு முஸ்தீபு செய்தது.

## சைப்பிரஸிலும் விமானம் கடத்த முயற்சி நிகழ்ந்தது

(பெய்றூட்)

ஜோர்தான் விமானம் ஒன்று கடத்தப்பட்டுக் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட செய்தி வந்து அதன் சூடாறு முன்பே மற்றோர் விமானக் கடத்தல் பற்றிய தகவல் சைப்பிரஸிலிருந்து அறிவிக்கப்படுகிறது.

கைக்குண்டை வைத்துக் கொண்டு நான்கு சிப்பந்திகளையும் விமானமோட்டியையும் மிரட்டிய பாலஸ்தீனியர் ஒருவர் அவர்களைப் பணயக்கைதிகளாக வைத்துக் கொண்டார் என்றும் எனினும் பின்னர் அவர் சைப்பிரஸ் அதிகாரிகளிடம் சரணடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கப்பல் சேவை; மறுபரிசீலனை அவசியம் என்கிறார் மந்திரி

(ராமேஸ்வரம்)

எண்பது வருட காலப் பழைமை வாய்ந்த இந்திய இலங்கை கப்பல் போக்குவரத்துச் சேவை நிறுத்தப்படுவது குறித்து மறுபரிசீலனை செய்யப்படவேண்டும் என்று மத்திய ஊரக இணையமைச்சர் திரு. சந்திராகசர் தெரிவித்துள்ளார்.

கப்பல் சேவைத் தடையால் உண்டான பாதிப்புகள் குறித்து ராமேஸ்வரம் மக்கள்

மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதாக அவர் உறுதியளித்தார்.

IAB Foundation, Inter & Final
IAA Part I
WEEK - END CLASSES
COMMENCING TOMORROW 15-6 85
Student registration will be done by us
கன்ரேபியா கல்வி நிறுவனம்
21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24201

ஈழமுரசு

## அத்துமீறிக் குடியேறியவர்கள் வெளியேற்றப்பட்டனர்

(குருநகர்)

குருநகர் தொடர் மாடி வீடுகளில் இதுவரை எவருக்கும் வழங்கப்படாமல் இருக்கும் 18 வீடுகளிலும் அத்துமீறிக் குடியேறியவர்கள், தொடர் மாடிக் கட்டடத்தில் வீடுகள் பெற்றுக் கொண்டவர்கள் மத்தியில் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் விழிப்புக் குழு அங்கத்தினர் எடுத்த நடவடிக்கை மூலமாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பதினெட்டு வீடுகளும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் தெரிவு செய்யப்படும் தகுதியான குடியிருப்பாளர்களுக்கு வழங்க நடவடிக்கைகள் எடுத்து வரப்படுவதாக யாழ். மாவட்ட முகாமையாளர் திரு. த. பூ. முருகையா அறிவித்துள்ளார்.

வாஷிங்டனில் அதிகாரி அறிவிப்பு:

# ராஜீவ் பாரதம் திரும்பியதும் ஈழப்பிரச்சினை தீர்வு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும்

(வாஷிங்டன்)

இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் இலங்கை இனப் பிரச்சினை குறித்துத் தான் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றிப் பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ்காந்தி அமெரிக்க ஜனாதிபதி திரு. ரெனால்ட் ரீகனிடம் எடுத்துரைத்தார்.

அண்டை நாடுகளுடனான பாரதத்தின் நட்புறவு முனைவு குறித்து திரு. ரீகனிடம் விளக்குகையிலேயே இலங்கை விவகாரம் குறித்தும் திரு. காந்தி பிரஸ்தாபித்தார்.

"இலங்கைத் தமிழர் பிரச்சினையில் விரைவில் தீர்வு ஒன்று ஏற்படும்" என்று அவ்வேளை திரு. காந்தி நம்பிக்கை வெளியிட்டார்.

இதேவேளை, பிரதம மந்திரி பாரதம் திரும்பியதும் அடுத்து வரும் சில வாரங்களுக்குள் இலங்கைப் பிரச்சினை குறித்துத் தீவிரப் பேச்சுவார்த்தைகளையும், ஆலோசனைகளையும் தொடர்ந்து நடத்தவுள்ளார் என்று இந்திய அதிகாரி ஒருவர் நேற்று அறிவித்தார்.

### போர் நிறுத்தம்....

...1ஆம் பக்கத் தொடர்

குமிடையில் போர் நிறுத்தம் ஒன்று ஏற்படுமென யு. என். ஐ. செய்தி நிறுவனம் நேற்றுத் தெரிவித்தது. இப்போர் நிறுத்தம் பற்றி உத்தியோகபூர்வமாக எவ்வித அறிவித்தலும் விடுக்கப்பட மாட்டாதெனவும், ஆனால் வடக்கு, கிழக்கு பகுதிகளில் அமைதி நிலவும் என்று அதிகார, ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்திருப்பதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வடபகுதி....

— 1ஆம் பக்கத் தொடர்

கட்டுப்படுத்தியிருப்பதால், இந்த மாறுதல், அரசாங்கம் தனது திட்டங்களைச் செயற்படுத்த அனுகூலமாக அமையுமென உயர் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

இதன் மூலம் ஏற்படும் சுமுகமான சூழ்நிலை, அரசியல் தீர்வு காண உகந்ததாக அமையுமெனவும் கூறப்படுகின்றது.

### 6 சட்ட அறிஞர்—

— 1ஆம் பக்கத் தொடர்

விரத்தின ஆகியோர் இக்குழுவில் இடம்பெறுகின்றனர்.

புதுடில்லி நீதி அமைச்சின் முக்கிய சட்டத்துறை அறிஞர்களுடன் இக்குழு இணைந்து தனது வேலைகளை அங்கு மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### எஸ்மன்ட் தமிழகம்....

— 1ஆம் பக்கத் தொடர்

டாரங்கள் தெரிவித்தன.

தமிழக விஜயத்தை முடித்துக் கொண்டு எஸ்மன்ட் விக்கிரமசிங்கா புதுடில்லி செல்லக் கூடுமெனத் தெரிகின்றது.

### நீண்ட இடை....

ரோந்து சேவையை சீர்படுத்தினர்.

இதனால் கல்வியங்காட்டுக் கடைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன.

ரோந்துப்படையினர் விமானமும் இவர்களைக் கவனித்துக்கொண்டுவானத்தில் சுற்றிவதையும் காணக்கூடியதாய் இருந்தது.

### பாவற்குளத்தில்....

— 1ஆம் பக்கத் தொடர்

பரணக் பஸ் சேவைகளுக்கு பலத்த பாதுகாப்பு அளிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

## கஷ்டப் பிரதேச ஆசிரிய மாற்றம் மட்டும் கவனிப்பு

மாவட்டங்களுக்கு இடையிலான ஆசிரியர்களின் இடமாற்றங்கள் உடனடியாக ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் கஷ்டப் பிரதேசங்களில் உள்ள ஆசிரியர்களின் இடமாற்றம் குறித்து கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று கல்விச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் திரு. ஆரியரத்ன தெரிவித்தார்.

பாடசாலைகளில் ஆசிரியர்களை ஒழுங்கு செய்வதில் ஏற்பட்ட கஷ்டத்தை மனதிற் கொண்டும் இம் முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஐயாயிரம் ஆசிரியர்கள் அவர்கள் விண்ணப்பித்த பகுதிகளுக்கு இவ்வருடம் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

### நாளை முதல்...

—1ஆம் பக்கத் தொடர்

கும் 17ம் திகதி திங்கட்கிழமை 136ம் பக்கம் தொடக்கம் 161ம் பக்கம் வரையில் உள்ளவர்களுக்கும், 18ம் திகதி செவ்வாய்க்கிழமை விதவைகள், அனாதைகள் ஓய்வூதியக்காரருக்கும், 19ம் திகதி புதன் கிழமை ஏனைய சகல ஓய்வூதியக்காரருக்கும் பென்ஷன் வழங்கப்படும்.

### யாழ்தேவி இன்று....

...1ஆம் பக்கத் தொடர்

புகையிரத நிலைய டிக்கற்றைப் பெறுமிடத்தில் ஒப்படைத்து தமது டிக்கற்றைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

புகையிரத வாறண்ட் பத்திரத்திற்கு டிக்கற் பெறுபவர்கள் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலேயே அதைச் செலுத்தி அதற்குரிய டிக்கற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

### கொள்ளை

(வண்ணார்பண்ணை)

நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து பொருட்களை ஏற்றி வந்த லொறியை ஆயுதம் தாங்கிய சிலர் கனகராயன் குளத்தடியில்வைத்து மறித்து, லொறியிலிருந்த சைக்கிள்கள், ரயர்கள், ரியூப்புகள் போன்றவற்றை கொள்ளையடித்துச் சென்றதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

### இரண்டு கலன்

குடாநாட்டில் வசிக்கும் வாகனச் சொந்தக்காரர்கள் தமக்குத்தேவையான இரண்டு கலன் பெற்றோலை அல்லது டீசலை பர்மிட் இன்றி வெளியிடங்களிலிருந்து கொண்டு வருவதற்கான அனுமதி தொடர்ந்தும் அமுலிலிருப்பதாக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.


## இன்று குதூகல ஆரம்பம்!

14-6-85 பி. ப. 3-00 மணி

## கங்கா மினி தியேட்டர்

நாச்சிமார் கோவிலடி

(சாந்தி அச்சகம்)

ஜெமினி கணேசன், சுஜாதா, ஸ்ரீபிரியா நடித்த

## காஞ்சி காமாட்சி

15-6-85 முதல்

காலை 10-30 — பி. ப. 8-15

சிவாஜி, பிரபு, ஊர்வசி நடித்த

## நாம் இருவர்

பி. ப. 4-45

## CHALLENGE OF THE NINJA

பயங்கர கராட்டி சண்டைகள் நிறைந்த ஆங்கிலப் படம்



## மாணவர்களுக்கு விசேட அறிவித்தல்

பனம் பொருள் அபிவிருத்திச் சபையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் இணைந்து நடாத்தும் பனைவள உற்பத்திக் கண்காட்சி 15ம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறும். சகல பாடசாலை மாணவ, மாணவிகளும் சனிக்கிழமை இக்கண்காட்சியைப் பார்வையிட்டுப் பயனடையுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பனம் பொருள் அபிவிருத்திச் சபை



A/L 87 ஆரம்பம் 15.6.85

சனி காலை 9.30 மணி

(எமது வழமையான ஆசிரியர்கள்)

தூய பிரயோக கணிதம்

திரு: நல்லையா

86, 87 புதிய பிரிவுகள்

ஆரம்பம்:

15-6-85 சனிக்கிழமை

NEW MASTER INSTITUTE

B M C Lane, JAFFNA.


"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப்பகுதியில் 14.6.1985 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது, தொலைபேசி: 23336